செய்தி வெளியீடு எண்.73 நாள்.11.09.2020

# செய்திக் குறிப்பு

**“சென்னை உயர்நீதிமன்ற ஆணையில், செப்டம்பர் / அக்டோபர் 2020 மாதங்களில் நடைபெறவுள்ள தேர்வுகளை எழுதவுள்ள சொல்வதை எழுதுபவர் சலுகை கோரி விண்ணப்பித்த மாற்றுத் திறனாளித் தேர்வர்கள் மற்றும் சொல்வதை எழுதுபவர்கள் ஆகியோருக்கு கோவிட் – 19 பரிசோதனை மேற்கொள்ளவேண்டும் எனஆணை வழங்கப்பட்டுள்ளது.**

**எனவே, நடைபெறவுள்ள எட்டாம் வகுப்பு தனித் தேர்வர்களுக்கான தேர்வு, பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வுகள் மற்றும் தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வுகளை எழுதவுள்ள மாற்றுத் திறனாளித் தேர்வர்களுள், சொல்வதை எழுதுபவர் சலுகை கோரி விண்ணப்பித்த மாற்றுத் திறனாளித் தேர்வர்கள் தேர்வு எழுதுவதற்கு முன்னர் அவர்களது விருப்பத்தின் பேரில் தங்கள் அளவிலேயே கோவிட்–19 பரிசோதனை மேற்கொள்ளலாம்.**

**கோவிட்–19 பரிசோனையினை மேற்கொள்வதில் ஏதேனும் சிரமம் இருந்தால், சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் 8778388793 என்ற தொலைபேசி எண்ணிற்கு 15.09.2020 தேதிக்குள் தொடர்பு கொண்டால், கோவிட்–19 பரிசோதனை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சொல்வதை எழுதுபவர் சலுகை கோரும் மாற்றுத் திறனாளிகள், கோவிட்–19 தொற்று இல்லை என்பதற்கான மருத்துவச் சான்றினை தேர்வு மையத்திற்கு வருகை புரியும் போது உடன் எடுத்து வரவேண்டும் என்ற விவரம் தேர்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது”**

இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-01